# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## அரசியலமைப்புக்கான இருபத்தியிரண்டாவது திருத்தம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்தியமைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷனி பர்ணாந்துபுள்ளே அவர்களால் 2024, மே மாதம் 22 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

*(2024, மே மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[***261 ஆம் சட்டமூலம்***]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00*** **தபாற் செலவு : ரூபா *150.00***

*இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அரசியலமைப்புக்கான இருபத்தியிரண்டாவது திருத்தம்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், அரசியலமைப்புக்கான இருபத்தியிரண்டாவது திருத்தச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**2.** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரிமையானது (இதனகத்துப் பின்னர் ''அரசியலமைப்பு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சட்டத்தின் பிரகாரம் திருத்தம் செய்யப்படுமாக:-

(i) இவ் உறுப்புரையின் இரண்டாவது பந்தியை உடனடுத்து பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

> ''ஆயின், ஒவ்வொரு அரசியல் கட்சியும் சுயேச்சைக் குழுவும் இவ் உறுப்புரையின்கீழ் சமர்ப்பிக்கப்படும் நிரலில் 50 சதவீதத்திற்குக் குறையாத பெண் உறுப்பினர்களை உள்ளடக்க வேண்டும்.''.

(ii) இவ் உறுப்புரையின் மூன்றாவது பந்தியை உடனடுத்து பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

> ''ஆயின், தேர்தல் ஆணையாளர் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரிடம் அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவரிடம், அத்தகைய அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவை

> பாராளுமன்றத்தில் பிரதி நிதித்துவப்படுத்துவதற்கு இந்த உறுப்புரையின் கீழ் 50 சதவீதத்திற்குக் குறையாத பெண் உறுப்பினர்களை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்தலும் வேண்டும்.”.

இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.